සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 09 | විෂයය / பாடம் / Subject: தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II | පැය / மணித்தியாலம் / Hours: 2 |

# பகுதி 1

**மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1) அதிகாலையில் துயில் விட்டு எழுக. **அதிகாலை** என்பதன் ஒத்த சொல்
   1. வைகறை 2. அனந்தல் 3. சாயங்காலம் 4. அல்

2) கடல் அலைகள் ஆர்ப்பரித்துக் கரையைத் தொட்டுச் சென்றன. **கடல்** என்பதன் ஒத்த சொல்
   1. சுரும்பு 2. செறு 3. புணரி 4. ஆரணியம்

3) பகைவர்க்கு அஞ்சினான். இதில் **பகைவர்** என்பதன் எதிர்ப்பதம்,
   1. எதிலார் 2. எதிரிகள் 3. தெவ்வர் 4. கேள்வர்

4) புயற்காற்றினால் அடித்துச் செல்லப்பட்ட படகு அங்கும் இங்கும் அலைந்தது. இதில் **அங்கும் இங்கும்** என்பது,
   1. இணைமொழி 2. இரட்டைக்கிளவி
   3. அடுக்குமொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்

5) பின்வரும் சொற்களில் வேறுபட்ட பொருள் குறித்து வரும் சொல்,
   1. வயல் 2. பழனம் 3. தழை 4. கழனி

6) பின்வருவனவற்றில் பெண்மானைக் குறிக்கும் மரபுப் பெயர்
   1. கலை 2. பிடி 3. பிணா 4. பிணை

7) நேற்றுத் தேர்த்திருவிழாவிற்குச் சென்றிருந்தேன் அதனால் வர முடியவில்லை. இதில் தோன்றா எழுவாய்
   1. நேற்று 2. திருவிழா 3. நான் 4. நீ

8) வெள்ளை பூட்டி உழுதான் இங்கு வெள்ளை என்பது,
   1. பொருளாகு பெயர் 2. சினையாகு பெயர்
   3. தொழிலாகு பெயர் 4. குணவாகு பெயர்

9) பின்வருவனவற்றில் வினையும் பெயரும் சேர்ந்து உருவான கூட்டுப்பெயர்,
   1. வானொலி 2. எழுதுகோல் 3. நதிக்கரை 4. பல்கலைக்கழகம்

10) பின்வருவனவற்றில் எதிர்காலம் காட்டும் இடை நிலைகள்
   1. கின்று, கிறு 2. ப், வ் 3. த், ட், ற் 4. ந், இன்

11) ஆசிரியர் பாடங்களைப் கற்பித்தார் இதில் வரும் 'பி' விகுதி
   1. செய்வினை 2. செயப்பாட்டுவினை 3.தன்வினை 4.பிறவினை

12) தம்பியே! பாராய். எனும் வாக்கியத்தில் வரும் வேற்றுமை,
1. முதலாம் வேற்றுமை 2. நான்காம் வேற்றுமை
3. ஆறாம் வேற்றுமை 4. எட்டாம் வேற்றுமை

13) கையின்கண் விரலுண்டு. எனும் வாக்கியத்தின் பொருள்,
1. பொருள் இடம் 2. சினை இடம் 3. தொழில் இடம் 4. கால இடம்

14) பின்வருவனவற்றில் பிறிதின்கிழமை உணர்த்தும் வாக்கியம்,
1. நதிக்கரையில் பறவைகளது கூட்டம் அதிகமாக காணப்பட்டது.
2. மரங்களது தொகுதியில் மான்களும் காணப்பட்டன.
3. உழவனது கரங்கள் உழைப்பால் உறுதியாகக் காணப்பட்டன.
4. துரியோதனது தோழன் கர்ணன் ஆவான்.

15) காயமே இது பொய்யடா. இதில் **காயம்** என்பது
1. உடல் 2. வடு 3. இலக்கு 4. பெருங்காயம்

16) பின்வருவனவற்றில் செயப்படுபொருள் குன்றிய வினை அமைந்த வாக்கியம்,
1.அவன் வேகமாக நடந்தான்.
2.அப்பா மரத்தை வெட்டினார்.
3.தம்பி பாட்டுப் பாடினான்.
4.மாணவன் வினாவுக்கு விடை தேடினான்.

17) இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை என்ற பழமொழியின் கருத்து,
1. உண்மையைச் சொல்லிக் கெட்டவர் எங்குமில்லை.
2. தருமம் செய்து கெட்டவர் எங்குமில்லை.
3. சேமித்து வைத்துக் கெட்டவர் எங்குமில்லை.
4. பொறுமையாக இருந்து கெட்டவர் எங்குமில்லை.

18) நீர் இங்கே இருந்தீரென நானறிந்திருந்தால்
1. உடனே வருகிறேன் 2. உடனே வந்திருந்தேன்
3. உடனே வந்திருப்பேன் 4. உடனே வருவேன்

19) ஆசிரியர் தம் மாணவனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவும் பயனற்றுப் போயின என்பதை குறிக்கும் உவமைத் தொடர்,
1. உள்ளங்கை நெல்லிக்கனி போல 2. இலைமறை காய்போல
3. உடுக்கை இழந்தவன் கை போல 4. புறக்குடத்தில் வார்த்த நீர் போல

20) கீழே ஒழுங்கின்றி காணப்படும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்திக் கட்டுக்கோப்பான பந்தியாக மிகச் சரியான ஒழுங்கினை தெரிவு செய்க.
அ. பழமொழிகளை யார், எப்பொழுது இயற்றினர் என்று சொல்ல முடியாது.
ஆ. அவை அவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துவிட்டு மறைந்து போகின்றன.
இ. அத்தகைய வாக்கியங்களே பழமொழிகள்.
ஈ. நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுவன.
உ. எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கவையாக பிறந்து மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன.

1. ஈ,ஆ,உ,இ,அ 2. ஆ,உ,இ,அ,ஈ 3. இ,ஈ,அ,உ,ஆ 4. ஈ,ஆ,உ,அ,இ

(20X2= 40 புள்ளிகள்)

# பகுதி - II

- **1ம் 2ம் வினாக்கள் உட்பட மேலும் 3 வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

1) வகுப்பறையில் கணிப்பீட்டிற்காக நீர் நடித்த நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நீர் நடித்த நாடகத்தின் தலைப்பு யாது? (2 புள்ளிகள்).
2. நாடகத்திற்கான தகவல்களைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகள் 3 தருக? (3 புள்ளிகள்).
3. நாடகத்தை நடிப்பதற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் 2 தருக? (3 புள்ளிகள்).
4. இக்கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது நீர் எதிர் நோக்கிய பிரச்சி னைகள் 3 தருக? (3 புள்ளிகள்)
5. இக்கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் 3 தருக? (3 புள்ளிகள்)

(14 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1. வாசிப்பினால் ஏற்படும் நன்மைகள்
2. நல்லெண்ணங்களை தேர்ந்து எடுப்போம்
3. புதிய வீடு தன் கதை கூறல்.
4. கடற்கரையில் ஒரு மாலைக் காட்சி

(16 புள்ளிகள்)

3) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

மனிதர் வெறுக்கும் சேற்றிலே மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான கடவுளை பூசை செய்ய உதவுதே
அழுக்கடைந்த சிப்பியில் அழகு முத்தை காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாய் கட்டி மகிழ உதவுதே
கன்னங்கரிய குயிலிடம் காது குளிரும் கீதமாம்
இன்பம் இன்பம் என்று நாம் இன்னும் கேட்கச் செய்யுதே
ஊசி போன்ற முள்ளிலே உயர்ந்த ரோஜா மலருதே
வீசி நல்ல மணத்தினை விரும்பி அணிய செய்யுதே
மோசமான இடத்திலும் மிகவும் நல்ல பொருள் உண்டு
யோசிக்காமல் எவரையும் ஏளனம் நீ செய்வதேன்?

அ. தாமரை எங்கு மலர்கிறது?

ஆ. இப்பாடலில் கூறப்படும் குயிலின் சிறுமை, பெருமைகள் எவை?

இ. இப்பாடலில் வரும் அடுக்கிடுக்குத் தொடர் ஒன்று தருக?

ஈ. சேற்றில் வளரும் தாமரையின் உயர்ந்த பண்பு எது?

உ. இப்பாடல் உணர்த்தும் விழுமியப் பண்பு யாது?

(5x2= 10 புள்ளிகள்)

4) பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மனிதனை தாழ்த்தும் உணர்வுகள் எவை?
2. இதயம் அழுகிறது எனும் பாடலில் "எனக்குள்ளே எப்போதும் உன்னி கருக்கூட்டும் உணர்வு" என்பதன் பொருள் யாது?
3. உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருட்கள் எவை?
4. எந்த வைத்தியராலும் மாற்றமுடியாத நோயை மாற்றியவர் யார்?
5. 'சின்னஞ்சிறு பூச்சி' என்ற குட்டிக் கதை உணர்த்தும் விழுமியப் பண்பு யாது?

(5x2= 10 புள்ளிகள்)

5) பின்வரும் சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் எழுதுக.

1. மாறுவேடம் 2. அரவம் 3. சுரும்பு 4. இடர் 5. சன்மானம்

(5x2= 10 புள்ளிகள்)

6) உமது பாடசாலையில் நடைபெறவுள்ள புதிய கட்டிடத் திறப்பு விழா ஒன்றிற்கான அழைப்பிதழ் ஒன்றினைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

7) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கூட்டு வினைச்சொற்கள் 2 தருக.
2. ஆக்கப்பெயர்கள் 2 தருக.
3. பந்தியமைக்கும் போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் 2 தருக.
4. உறவுமுறைக் கடித உறுப்புக்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.
5. பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.

அ) அல் + திணை = …………………

ஆ) வா + என்றான் = …………………

(5x2= 10 புள்ளிகள்)